## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C No.228/2009

2022– வருடம் ஜனவரி மாதம் 19–ம் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வம் (அ.சா.–1) | தொழில் | : | |
| த/பெ., க/பெ. | : | | வயது | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுகா | : | | நாள் | : | 19.1.2023 |
| மாவட்டம் | : | | | | |

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்பவத்தின்போது நான் மடத்துக்குளத்தில் குடியிருந்து வந்தேன். கடந்த 2014–ம் ஆண்டு நான் லாரி ஓட்டுனராக பணிபுரிந்து வந்த போது துாத்துக்குடியிலிருந்து சாமிநாதபுரத்தில் இருக்கும் அமராவதி பேப்பர் மில்லுக்கு பேப்பர்களை லாரியில் ஏற்றிக் கொண்டு சுமார் அதிகாலை 4.30 மணியளவில் சின்னகலையமுத்துாருக்கு அருகில் காலைக்கடனை முடிப்பதற்காக வண்டியை நிறுத்திய போது ஆஜர் எதிரிகள் இருவரும் கடத்தியைக் காட்டி மிரட்டி என்னிடம் வந்து ரூ.1500/– பணமும் ஓட்டுனர் உரிம அட்டையையும் என்னிடம் வந்து பறித்துக் கொண்டனர். ஆஜர் எதிரி இருவரும் ஓடி விட்டனர். ஆஜர் 1–ம் எதிரி கத்தியின் கைபிடியால் எனது வலது கண்ணத்தில் குத்தினார். அதில் எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. 2–ம் எதிரி எனது கையை பின்னால் இழுத்து பிடித்து வைத்துக்கொண்டார். எதிரிகள் இருவரும் என்னிடம் பணத்தை பிடிங்கிக் கொண்டு ஓடிவிட்டார்கள். சம்பவத்தின் போது என்னுடன் லாரியில் குமார் என்ற மற்றொரு டிரைவரும் இருந்தார். கட்டியிருந்த என் கைகளை மேற்படி குமார் அவிழ்த்து விட்டார். அதற்கு பின்னர் நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஆகும். அது அ.சா.ஆ.–1. என்னிடம் காட்டப்படும் கத்திகள் சம்பவத்திற்கு எதிரிகள் பயன்படுத்திய கத்திகள் தானா என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஓட்டுனர் உரிமம் சம்பவத்தின் போது சாட்சி குமாரின் ஓட்டுனர் உரிமம் ஆகும். சம்பவயிடத்தில் அவர் என்னை கூப்பிட வந்த போது அவரது ஓட்டுனர் உரிமம் அங்கே கீழே விழுந்து விட்டது. என்னுடைய ஓட்டுனர் உரிமமும் அங்கேயே விழுந்து விட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை : (1– வது எதிரி தரப்பில்)

புகாரை போலீசார் எழுதினார்கள். காவல் நிலையத்தில் வைத்து எழுதினார்கள்.

என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். புகாரில் என்னுடைய முகவரி மதுரை என்றும், அதில் கொடுக்கப்பட்டுள்ள முகவரி மடத்துக்குளம் முகவரி என்றும் சொன்னால் சரிதான். நான் மருத்துவமனைக்கு போகவில்லை. சம்பவம் நடந்து சுமார் 1/2 மணிநேரம் கழித்து அதாவது காலை சுமார் 5 மணிக்கு புகார் கொடுத்தேன். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்னது போலத்தான் புகார் கொடுக்கும் போது போலீசாரிடம் சொன்னேன். சம்பவ இடம் இருட்டான இடம் தான் அங்கு தெருவிளக்கு எதுவும் இல்லை. சின்னக்கலையம்புதுார் தாண்டிய உடன் உள்ள இடம் தான் சம்பவயிடம் ஆகும் பழனியிலிருந்து சின்னக்கலையம்புதுாருக்கு அடுத்த ஊர் ஆகும். புகாரில் சின்னக்கலையம்புதுாருக்கு 1 1/2 கி.மீட்டருக்கு முன்னால் இருக்கும் பெத்தநாயக்கன்பட்டி பிரிவு தான் சம்பவ இடம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் தெரு விளக்குகள் இல்லாத நிலையில் எதற்காக அந்த இடத்தில் வண்டியை நிறுத்தினேன் என்றால் அங்கு ஒரு வாய்க்கால் உள்ளதால் அங்கு நிறுத்தினேன். நான் சொல்வது போல் அந்தப் பகுதியில் வாய்க்கால் எதுவும் இல்லை என்றும் தற்போது சொல்லும் சம்பவ இடமும் தவறானது என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ள சம்பவ இடமும் தவறானது என்றும் சொன்னால் சரியல்ல. பழனியில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டு தான் அதன் பிறகு மடத்துக்குளம் சென்றேன். பழனியில் உள்ள எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் ரயில்வே காலணி என்ற ஊரே மடத்துக்குளத்தில் சம்பவ காலத்தில் இல்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு காலை சுமார் 9 மணிக்கு லாரியில் உள்ள லோடை இறக்கினோம். புகார் கொடுத்து விட்டு மடத்துக்குளம் போகும் வழியில் சாமிநாதபுரம் காவல் நிலையம் உள்ளது அங்கு எங்கள் லாரியின் லோடு என்டிரி பாஸ் கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் காலை சுமார் 5 மணிக்கு புகார் கொடுத்த போது அங்கு சுமார் 2 காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் சம்பவயிடத்தை வந்து பார்த்தார்கள். விசாரணை செய்த அதிகாரியும் அங்கு வந்தார். மொத்தம் சுமார் 4 போலீசார் சம்பவயிடம் வந்தார்கள். எதிரிகளை அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை. எதிரிகள் முன்பு எனக்கு பழக்கம் இல்லாததால் சம்பவ நேரம் இருட்டாக இருந்ததால் அவர்களை என்னால் சரியாக அடையாளம் காட்ட முடியவில்லை. அன்றைய தினம் நான் புதிய சட்டை வாங்கி அணிந்திருந்தேன் அந்த சட்டையை என்னிடம் இருந்து பறித்துக் கொண்டு ஆஜர் 2–ம் எதிரி அதனை அணிந்திருந்தார். அதனை வைத்து அவர் சம்பவத்தில் ஈடுபட்டதாக அடையாளம் தெரிந்து கொண்டேன். எதிரிகள் இருவரையும் போலீசார் அப்போதே கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் அணிந்துள்ளது போல் சட்டையை எங்கு வேண்டுமானாலும் வாங்கி யார் வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம் என்றும் சட்டையை வைத்து 2–ம் எதிரியை அடையாளம் தெரிந்து கொண்டதாக புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லாமல் தற்போது பொய்யாக அவ்வாறு கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2–ம் எதிரி அணிந்திருந்த என்னுடைய சட்டையை போலீசார் கைப்பற்றவில்லை. நான் புகார் கொடுத்த உடன் இவர்கள் தான் எதிரிகள் என்று எதிரிகளை போலீசார் அடையாளம் கண்டு கொண்டார்கள். போலீஸ் விசாரணையில் நான் மாறுபட்ட சாட்சியாகவும், புகார் கொடுத்த நேரமும், புகாரில் சொல்லப்பட்டுள்ள செய்திகளும் மாற்றி தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால்

சரியல்ல. என்னிடம் பறித்து சென்ற ரூ.1500/- ஐ நான் திரும்ப பெற்றுக் கொள்ளவில்லை. நான் இருட்டில் சம்பவ நடந்ததாக ஒப்புக் கொண்டுள்ள நிலையில் போலீசார் எதிரிகளை பிடித்து வந்து அவர்கள் தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொன்னதன் அடிப்படையில் எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் வந்த துணை டிரைவர் குமார் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. அவர் லாரியில் இருந்தார். எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது கூறும் குற்றச்சாட்டு பொய்யானது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை : ( 2-ம் எதிரி தரப்பில்)
1-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR
Date: 2023.01.19 16:54:27 +0530